**ஹொரண நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹொரண நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 3/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சற்கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 24 ஆம் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிராத 2 செயற்திட்டங்களுக்காக ரூபா 324,477 தொகையான கடன்கொடுத்தோராக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் ஆண்டிற்கான செலவினமும் கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதியும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவேட்டின் படி, நிலவிவரும் நிலுவையான மதுபானசாலை வருமானமான ரூபா 1,119,552 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 21,700 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 4 சீலிங் மின்விசிறிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது பெறவேண்டிய பட்டப்படிப்புப் படிப்பணமும் ஊழியர் கடன் வட்டித்தொகையுமான ரூபா 140,330 தொகை முற்பணக்

கணக்கிற்குக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையைச் சீராக்குவதற்காக முற்பணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு நிலுவையான ஏனைய வருமானக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியக் கணக்குகள் மற்றும் முற்பணக் கணக்கு மீதி அதே பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2013 திசெம்பர் மாதம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் உள்ளக நிதிப் பரிமாற்றமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 49,117 தொடர்பாக காசேடுகளில் நிலவிய தவறைச் சீராக்குவதற்குப் பதிலாக பொதுக் காசுக் கணக்கிலிருந்து கைத்தொழில் காசுக் கணக்கிற்கு மேற்குறித்த பரிமாற்றல் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதிக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் கடன் அடிப்படையில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டிக்காக செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் அதன் தவணைப் பணக் கொடுப்பனவும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,315,431 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,730,375 ஆக இருந்தது.

### 2.2 செயற்பாடற்ற கணக்குகள்

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கும் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கும் 2006 ஆம் ஆண்டு முதல் செயலிழந்திருந்ததுடன் அக் கணக்குகள் இரண்டிலும் முறையே ரூபா 99,885 தொகையும் ரூபா 941,985 தொகையுமான மீதி பயன்பாடின்றிக் காணப்பட்டது.

(ஆ) 1973 திசெம்பர் 31 ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கியின் கொழும்பு நகரக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கின் ரூபா 771,892 தொகையான ஓர் மீதி மீளாய்வாண்டின் இறுதியிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 17,916 | 11,351 | 10,263 |
| (ii) | வாடகை | 6,581 | 2,608 | 6,140 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 159 | 159 | -- |
| (vi) | ஏனை வருமானம் | 1,175 | 1,123 | 131 |

**2.3.2 வீதவரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான வீதவரி மீதி ரூபா 8,929,567 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 2014 யூலை வரையிலும் ரூபா 3,186,665 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை மீதியான ரூபா 5,742,902 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 கடை வாடகை**

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் படி, 2013 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரித்தான நிலுவையான கடை வாடகை மீதி ரூபா 2,702,848 தொகையானதுடன் இதில் ரூபா 959,382 தொகை 2014 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த நிலுவை மீதியில் 1989 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் 69 வாடகை வாடகை செலுத்துனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 426,930 தொகையான கடை வாடகை மீதியும் காணப்பட்டது.

(ஆ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த புதிய கடைத் தொகுதிகளின் விழா மண்டபத்தின் குத்தகை உடன்படிக்கைக் காலம் 2011 நவம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன் குத்தகை உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கோ அல்லது காலத்தை நீடிப்பதற்கோ கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 19 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகை வருமானப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டு முழுதும் வாடகை அறவிடப்பட்டிராத 6 கடைகள் காணப்பட்டதுடன் அவற்றின் நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,700 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 6 கடைகளின் உடன்படிக்கைகளின் செல்லுபடிக்காலத்திற்கு மேலாக 2 ஆண்டுகளுக்கும் 28 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றைப் புதுப்பிப்பதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 19 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வியாபார வரி**

2013 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரித்தான நிலுவையான வியாபார வரித் தொகையான ரூபா 134,160 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 30

ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம்**

1980 இன் 26 ஆம் இலக்க உணவு மற்றும் ஔடத ஏற்பாடுகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் நகரசபை எல்லையில் உணவு விற்பனை செய்யப்பட்ட இடங்களுக்கு எதிராக சபையால் 2012 இல் மேற்கொள்ளப்பட்ட 07 சுற்றிவளைப்புகளுக்காக ரூபா 69,000 தொகையான தண்டப்பணமும் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 04 சுற்றிவளைப்புகளுக்காக ரூபா 109,000 தொகையான தண்டப்பணமும் விதிக்கப்பட்டமை தொடர்பாக சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய 75 சதவீதத் தண்டப்பண வருமானத் தொகையான ரூபா 133,500 தொகை 2014 யூலை 16 ஆம் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 மதுபானசாலை வருமானம்**

2012 நவம்பர் முதல் 2013 திசெம்பர் வரையான 14 மாதங்களாக நிலுவையாகக் காணப்பட்ட மதுபானசாலை வருமானத் தொகையான ரூபா 980,000 தொகையை அறவிடுவதற்காக கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 15 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதுபானசாலை வருமானம் தொடர்பில் பட்டியலிடப்படல், பண அறவீடு மற்றும் நிலுவைப் பணம் காண்பிக்கப்படும் வகையில் ஓர் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3. முகாமைத்துவத் திறமையீனங்கள்**

**3.1 காலாவதியான வைப்புக்கள்**

ரூபா 2,988,644 தொகையான காலாவதியான வைப்புக்கள் நி.பி. 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 159(ஊ) பந்தியில் ஏற்பாடுகளின் படி, எவரேனுமோர் அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது 2013 திசெம்பர் 19 ஆம் திகதி சபை அங்கீகாரத்துடன் ஓர் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டிருந்த கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றிற்கு அனுசரணை வழங்கப்படுவதற்காக ரூபா 100,000 தொகையான பணம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 119 ஆம் பிரிவின் படி, ஓர் நகர சபையால் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றுவதற்காக முறையான நடைமுறை ஒன்று இருக்காமையால் சபையால் 2013 சனவரி முதல் யூன் வரை ரூபா 1,205,825 தொகை குப்பைகளைக் கொண்டுசெல்வதற்காக வெளி நபர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2013 யூன் மாதத்தின் பின்னர் சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் குப்பைகள் மொறட்டுவை நகர சபைக்குரித்தான குப்பைகள் அகற்றும் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்ததுடன் அச் செலவினத்திற்காக கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 19 ஆம் திகதி வரையிலும் பட்டியல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) வருமான நிருவாகம்
(iii) இருப்புக் கட்டுப்பாடு
(iv) சொத்து முகாமைத்துவம்
(v) செயற்திட்ட நிர்வாகம்